முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை
இடைநிலை மனு எண். 05/2025
in
O.S.No.584/2023

1. தங்கம்
2. நல்லம்மாள்
3. சின்னபொண்ணு ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ராக்கியண்ணன்
2.ரமணன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. மாதேஷ்வரி .... எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

இம்மனு 09.02.2026–ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பிரபாகரன் அவர்கள் முன்னிலையாகியும், 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S.அன்பு அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையால் அவர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர்கள்/ வாதிகள் 3–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:30:26 +0530

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது வாதிகளால் பாகப்பிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் மனுதாரர்கள்/வாதிகளுக்கும், 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பிரிபடாத இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்கள் ஆகும். மனுதாரர்கள்/வாதிகளும், 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் தங்களுடைய கூட்டு சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்தார்கள். இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகளின் தந்தை ராஜுவிற்கு வழக்கு சொத்துக்களில் தனிப்பட்ட உரிமை இல்லாதபோதிலும் 14.08.2020 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5234/2020 – மூலம் 1–ம் பிரதிவாதியின் பெயரில் பொய்யான மற்றும் மோசடியான தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாக மனுதாரர்கள்/வாதிகள் தெரிந்து கொண்டார்கள். அதனை தொடர்ந்து 1–ம் பிரதிவாதி 06.01.2023–ம் தேதியன்று ஆவண எண்.187/2023 – மூலம் வழக்கு சொத்துக்களில் ஒரு பகுதியை 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு விற்கிரையம் செய்யப்பட்டதாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக மற்றும் கூட்டு குடும்ப சொத்துக்கள் ஆகும். எனவே மனுதாரர்களின் தந்தை ராஜு அவர்களுக்கு வழக்கு சொத்துக்களில் தனிப்பட்ட முழு உரிமை எதுவும் இல்லை. எனவே அவரால் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட விற்கிரைய பத்திரம் பொய்யானதும், மோசடியானதும் மற்றும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:30:36 +0530

செல்லத்தக்கதுமல்ல. மனுதாரர்கள்/வாதிகள் பலமுறை நேரடியாகவும், பஞ்சாயத்தார்கள் மூலமாகவும் வழக்கு சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொடுக்குமாறு கேட்டும் அவர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் மனுதாரர்களின் தந்தை ராஜு கடந்த 02.09.2023 அன்று இறந்துவிட்டார். வழக்கு சொத்துக்களில் மனுதாரர்களுக்கு 5/6 பாகம் பெற உரிமை உள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்கள் பெயரில் உள்ள போலியான ஆவணங்களை காரணம் காட்டி வழக்கு சொத்துக்களை மூன்றாம் தரப்பினர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சர்வே எண்.19/2B– பகுதியில் கட்டிட வேலைகளை செய்து வருகிறார். 09.03.2025 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் முதல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி JCB வாகனத்தின் மூலம் மண்ணை எடுத்து சென்றுள்ளார். இது குறித்து முதல் மனுதாரரின் கணவர் ஓமலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.146/2025–இன்கீழ் பிரிவுகள் 294(b), 115(2) BNSS – இன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி 07.02.2025 – அன்று ஆவண எண்.1311/2025 மூலம் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு விற்பனை செய்துள்ளார். 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என்பதால் அதன் அடிப்படையில் இந்த விற்கிரைய ஆவணமும் செல்லத்தக்கதல்ல. எனவே வழக்கில் உரிய நிவாரணங்களை பெறுவதற்காக 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை இவ்வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. எனவே அவரை இவ்வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:30:50 +0530

செய்யப்பட்டுள்ளது.

3. <u>3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:</u>–

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். வழக்கு சொத்துக்கள் ஆரம்பத்தில் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை ராஜு என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். பின்னர் ராஜு அவர்கள் 14.08.2020 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.5234/2020 மூலம் தனது மகன் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்துள்ளார். இதனால் 1–ம் மனுதாரர்/பிரதிவாதி வழக்கு சொத்துக்களுக்கு முழு உரிமையாளராவார். வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 1–ம் மனுதாரரின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு சொத்துக்களில் உள்ள 1–ம் அயிட்ட சொத்தை 06.01.2023–ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.187/2023 மூலம் 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். இதன்மூலம் 2–ம் எதிர்மனுதாரர் அந்த சொத்தின் முழு உரிமையாளராகி வருவாய் ஆவணங்களும் அவரது பெயரில் மாற்றம் செய்யப்பட்டு அனுபவித்து வருகிறார். பின்னிட்டு 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் உள்ள முதல் அயிட்ட சொத்தை 07.02.2025 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1311/2025 மூலம் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:00 +0530

இதன்மூலம் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் அந்த சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார். வில்லங்க சான்றிதழை பரிசீலனை செய்யும்போது மேற்படி சொத்திற்கு எதிராக பிணையோ அல்லது வழக்குகளோ நிலுவையில் இருப்பதாக தெரியவரவில்லை. மேலும் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அந்த சொத்தைப்பற்றிய எவ்வித தடையும் பதிவு செய்யப்படவில்லை. எனவே 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து நியாயமான முறையில் கிரையம் பெற்ற நபர் ஆவார். மேற்படி சொத்தை 2–ம் எதிர்மனுதாரரிடமிருந்து கிரையம் பெறும்போது 1–ம் மனுதாரர் அங்கிருந்துள்ளார். அப்போது எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. வழக்கு சொத்தை கிரையம் பெற்றபின்னர் அரசு துறை அதிகாரிகளால் அந்த சொத்து மீண்டும் அளவிடப்பட்டு 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரின் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டு, வருவாய் ஆவணங்கள் அனைத்தும் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரின் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பெருந்தொகை செலவிடப்பட்டு நிலத்தை மேம்படுத்தியுள்ளார். மனு மற்றும் பிரமாணப்பத்திரத்தை பார்க்கும்போது அந்த சொத்து மனுதாரர்களின் தந்தை ராஜு என்பவரின் தனிச்சம்பாத்திய சொத்து என்பது தெரிய வருகிறது. எனவே மனுதாரர்களுக்கு அந்த சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை. மனுதாரர்கள்/வாதிகள் எப்போதும் அந்த சொத்தின் உடைமையில் இருந்ததில்லை. எனவே 07.02.2025–ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்கது ஆகும். அதனை ரத்து செய்ய இயலாது. எனவே மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:08 +0530

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

6. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. தீர்வு:–

மனுதாரர்கள்/ வாதிகள் 3–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

**8.** மேற்படி அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதியானது 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரால் கடந்த 07.02.2025–ம் தேதியன்று கிரையம் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே, அவரை இவ்வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்த்து கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் ஆஜரான 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரான மாதேஷ்வரி தரப்பில் எதிருரை தாக்கல் செய்து மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தந்தை ராஜு என்பவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி ராஜு 14.08.2020 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலக பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.5234/2020 மூலம் தனது மகன் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் வழக்கு சொத்துக்களை ஒப்படைத்துள்ளார்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:16 +0530

என்றும், அதன்பின்னிட்டு 1–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு சொத்துக்களில் உள்ள 1–ம் அயிட்ட சொத்தை பொறுத்து 06.01.2023–ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.187/2023 மூலம் 2–ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதும், இதன்மூலம் 2–ம் எதிர்மனுதாரர் அந்த சொத்தின் முழு உரிமையாளராகி, வருவாய் ஆவணங்களும் அவரது பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. அதன் பின்னிட்டு 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் உள்ள முதல் அயிட்ட சொத்தைப் பொறுத்து 07.02.2025 அன்று (இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது) பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.1311/2025 மூலம் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி 3–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை பார்க்கும்போது அவர் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தெரிவிக்க வேண்டிய சங்கதிகள் அனைத்தையும் மேற்படி 1–ம் பிரதிவாதியாகவே தன்னை பாவித்துக்கொண்டு தெரிவித்துள்ளார் என்பது தெரிய வருகின்றது. இருப்பினும் இவ்வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதியை 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரால் கிரையம் பெறப்படவில்லை என்று குறிப்பான வகையில் மறுத்து யாதொரு சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை. மேற்படி 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் கிரையம் பெற்றுள்ள சொத்தில் அவருக்கு முழு பாத்தியம் உள்ளதா? 3–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினர் பெற்றுள்ள கிரையம் செல்லக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதைப் பொறுத்தும் தனியாக வேறு வழக்கு தாக்கல் செய்து முடிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை இவ்வழக்கிலேயே 3–ம் பிரதிவாதியாக

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:23 +0530

சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்தும் பட்சத்தில் அது இருதரப்பினருக்குமிடையே உள்ள பிரச்சனைகளை ஒரே நடவடிக்கையான இவ்வழக்கில் முடிவு செய்வதற்கு ஏதுவாக அமையும். எனவே மேற்படி அசல் வழக்கில் 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை 3–ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த மனுதாரர்கள்/வாதிகளால் கோரப்படும் பரிகாரமானது ஏற்புடையதாக உள்ளது. எனவே மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை அனுமதித்து 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை 3–ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துக்கொள்ள உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில், மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட்டு, 3–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 3–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடப்படுகிறது. மனுவின் சூழ்நிலையை கருத்திற்கொண்டு செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09–ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:34 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.09 05:31:42 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.